# ஜெயங்கொண்டம் நகராட்சி

| Date of Meeting of the Council | MCR NO | SERIAL NUMBER AND SUBJECT IN THE AGENDA | DECISION OF THE COUNCIL |
| --- | --- | --- | --- |
| 31.07.2018 | | ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2018ம் ஆண்டு ஜுலை மாதம் 31.07.2018ம் செவ்வாய்க் கிழமை காலை 11.30 மணியளவில் நடைபெற்ற சாதாரணக் கூட்டம்.<br>**தனி அலுவலர்,**<br>**ஜெயங்கொண்டம் நகராட்சி** | |
| 31.07.2018 | 18 | **பொருள் எண். 1**<br>ஜெயங்கொண்டம் நகராட்சியின் பேருந்து நிலையத்தில் பேருந்து நிலையத்தின் விரிவாக்கம் செய்திட கட்டுமான பணிகள் தொடர்ந்து நடைப்பெற்று வருவதால் இருசக்கர வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமையை 01.04.2018 முதல் 30.09.2018 முடிய மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு செய்து வழங்கிட மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.132/2018/அ1 | அனுமதிக்கப்பட்டது |
| 31.07.2018 | 19 | **பொருள் எண். 2 (19)**<br>01.04.2018 ஆம் தேதி முதல் நகராட்சிகள் / மாநகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் சொத்து வரியினை பொது சீராய்வு (General Revision of Property Tax) மேற்கொள்வது தொடர்பாக தமிழ்நாடு அரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை G.O.Ms.No.73, நாள்.19.07.2018 மற்றும் இதனைத் தொடர்ந்து உத்தரவிடப்பட்டுள்ள G.O.Ms.No.76, நாள்.26.07.2018 ஆகிய அரசாணைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>அரசாணை எண்.73 நாள்.19.07.2018ல் குடியிருப்பு கட்டடங்களுக்கு 50 சதவிதங்களுக்கு மிகாமலும், குடியிருப்பு வாடகைக் கட்டடங்களுக்கு 100 சதவிகிதத்திற்கு மிகாமலும் , வணிக கட்டடங்களுக்கு 100 சதவிகிதங்கள் மிகாமலும் சொத்துவரி சீராய்வு மேற்கொண்டு, சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. இதனை தொடர்ந்து பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண்.76 நாள்.26.07.2018 ல் குடியிருப்பு வாடகைக் கட்டடங்களுக்கு 100 சதவிகிதத்திற்கு மிகாமல் என்பதை நீக்கம் செய்து, இந்த வகையிலான கட்டடங்களுக்கு குடியிருப்பு கட்டடங்களுடன் சேர்க்கப்பட்டு 50 சதவிகிதத்திற்கு மிகாமல் உயர்வு செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. இவ்விபரங்களை மன்றம் பதிவு செய்யலாம்.<br>ந.க.எண்.1030/2018/அ2 | படித்து பதிவு செய்யப்பட்டது |